# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

சிறப்பு அமர்வு வழக்கு எண் 220/2024

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 2 (lw- 2) | | |
| பெயர் | முருகவேல் | நாள் | 14.02.2024 |
| தந்தை பெயர் | | ஜாதி | |
| கிராமம் | | தொழில் | |
| | கலைஞர் காலனி | சமயம் | |
| தாலுக்கா | மயிலாடுதுறை | வயது | |

(1 முதல் 10 எதிரிகள் சிறையிலிருந்து ஆஜர் படுத்தப்பட்டனர். 11ம் எதிரி ஆஜரில்லை. எதிரி ஆஜரின்மை காரணமாக எதிரி தரப்பு வழக்கறிஞர் மனுதாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் மயிலாடுதுறை டவுன் கலைஞர் காலனியில் வசித்து வருகிறேன். பழ வியாபாரம் செய்து வருகிறேன். கொலையுண்டு இறந்து போன அஜித்தை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். சத்யநாதன் இன்று வரவில்லை. அவரையும் எனக்கு தெரியும். மயிலாடுதுறை கொத்த தெருவை சேர்நத கண்ணன் என்பவருக்கும் மயிலாடுதுறை கலைஞர் காலனியை சேர்ந்த கதிரவன் என்பவருக்கும் முன்விரோதம் இருந்தது. கண்ணன் படையாட்சி வகுப்பை சேர்ந்தவர். கதிரவன் பறையர் இனத்தை சேர்ந்தவர். கண்ணனுக்கு கதிரவனுக்கு சண்டை நடந்து கதிரவனை கண்ணன் வெட்டிவிட்டார். கதிரவன் மருத்துவமனையில் இருந்தார். கண்ணன் அதற்காக சிறையில் இருந்தார். அதனால் அவர்களுக்குள் முன்விரோதம். கண்ணன் பேர்லஸ் தியேட்டர் வாசலில் படுகொலை செய்யப்பட்டார். அது சம்பந்தமாக எங்கள் தெருவை சேர்ந்த 22 பேர் மீது கொலை வழக்கு உள்ளது. நானும் ஆரோக்கியநாதபுரத்தை சேர்ந்த மார்ட்டின் என்பவரும் மாப்படுகைக்கு சொந்த வேலையாக 20.03.2024

அன்று இரவு 6.30, 7.00 மணியளவில் சென்று விட்டு இரவு 8.00 மணிக்கு மேல் திருவழுந்தூர் பெருமாள் கோவில் சாலைக்கு எதிர்புறம் உள்ள பள்ளிக்கூட சாலையில் Hero splender வண்டியில் வந்து கொண்டிருந்தோம். வண்டியை மார்டின் ஓட்டினார். நான் பின்னால் உட்கார்ந்திருந்தேன். அஜித்தும் சரவணனும் இருசக்கர வாகனத்தில் போனார்கள். அஜித் வண்டியை ஓட்டினார் சரவணன் பின்னால் உட்கார்ந்திருந்தார். அப்போது எங்கள் வண்டியை இரண்டு இருசக்கர வாகனங்கள் முந்தி சென்றது. அவை சிவப்பு கலர் அப்பாச்சி, மற்றும் வெள்ளைக்கலர் பல்சர் வண்டி. ஒரு வண்டியில் மூன்று பேரும் மற்றொரு வண்டியில் இரண்டு பேரும் போனர்கள். அவர்கள் பெயர் சந்திரமோகன், சந்திரமௌலி, ஸ்ரீராம், பாலாஜி, மற்றொரு நபர் பெயர் சதீஷ். (மேற்படி எதிரி பெயரை பதிவு செய்ய வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார் ஆட்சேபணை பதிவு செய்யப்படுகிறது) சரவணனும் அஜித்தும் போன வண்டி மீது இவர்கள் வண்டியை மோதி கீழே தள்ளி அஜித்தை சந்திரமௌலி, சதீஷ், பாலாஜி, ஸ்ரீராம், சந்திரமோகன் ஆகியோர் தலையிலேயே அரிவாளால் வெட்டினார்கள். பின்னாடியே சத்தியசீலன், நாகராஜ் ஆகியோர் அரிவாளால் அஜித்தை தலையில் வெட்டினார்கள். குறுக்கே தடுக்க வந்த சரவணனை ஐந்து பேர் வெட்டினார்கள். அவர்கள் பெயர் சதீஷ், சந்திமௌலி, சந்திரமோகன், ஸ்ரீராம், பாலாஜி ஆகியோர். அவர்கள் சரவணனை வலது முன்கையிலும் விரலிலும் வலது முதுகிலும் அரிவாளால் வெட்டினார்கள். மீண்டும் மூன்று நபர்கள் சரவணனை மறைத்தார்கள். பெயர் தெரியவில்லை ஆள் தெரியும். சாட்சி கடைசியாக நிற்கும் மூன்று நபர்கள் என்று கூறுகிறார். (அவர்களின் பெயர் அஜித்குமார், மகாவிஷ்ணு, மோகன்தாஸ் என்று அவர்களின் பெயரை

விசாரித்தபோது தெரியவருகிறது) பிறகு ஐந்து இருசக்கர வாகனங்களில் நீடூர் பக்கம் போய்விட்டார்கள். பயத்தில் நாங்கள் அங்கிருந்து கிளம்பி விட்டோம். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**8 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் மார்டினும் 20.03.2024 அன்று ஒன்றாக சென்றபோது சம்பவத்ததை பார்த்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை தெரியும் என்று வழக்கிற்காக முதல் முறையாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கடைசியாக நிற்கும் மூன்று நபர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லியுள்ள சங்கதியை போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் அப்போது எனக்கு அவர்கள் பெயர் தெரியாது. பசங்க போட்டோ காட்டிய பிறகுதான் அவர்கள் பெயர் எனக்கு தெரியவந்தது. மேற்படி சங்கதியை போலிசார் விசாரணையின் போது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். வழக்கிற்காக போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்கள் மேற்படி சங்கதியை பொய்யாக முதன்முறையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்து போன நபர் எனக்கு உறவினர் இல்லை என் பக்கத்து வீட்டுக்காரர். அவர் எனக்கு சிறு வயது முதல் பழக்கம். அதன் காரணமாகத்தான் கடைசியாக நிற்கும் மூன்று நபர்கள் சம்பவத்தில் ஈடுபட்டதாக அடையாளம் காண்பித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 8 ம் எதிரியை தொடர்பு படுத்துவதற்கு வலுவான சாட்சியம் தேவைப்பட்டதால் 06.04.2024 ற்கு பிறகு இறந்து போனவரின் குடும்பத்தினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க என்னை முன்னிறுத்தி சாட்சியம் உருவாக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனடிப்படையில் விவரங்கள் நேரடியாகத்தெரியாமல் பொய்

சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**11ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்த போது பயத்தில் அந்த வழியாக செல்லாமல் திரும்ப சென்று விட்டோம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் 15 வருடங்களாக பழவியாபரம் செய்து வருகிறேன். நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பது போல் வேறு எந்த வழக்கிலாவது சாட்சியம் அளித்திருக்கிறேனா என்றால் இல்லை. நான் சாலையில் பழ வியாபாரம் செய்பவன் என்றாலும் அதனால் சம்பவத்தை பார்த்திருந்தால் போலிசில் புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் பார்க்காத சம்பவத்தை பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் இது சம்பந்தமாக எழுத்துபூர்வமான புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரி. காயம் பட்ட நபர்களுக்கு மருத்துவ உதவி செய்யவில்லை என்றால் சரி. சம்பவ இடத்தில் நான் இல்லை என்றாலும் அதனால் தான் புகார் கொடுக்கவில்லை என்றாலும் மருத்தவ உதவியும் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

**1 முதல் 5, 7 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 முதல் 5, 7 மற்றும் 10 எதிரிகள் தரப்பில் இலவச வழக்கறிஞர் நியமனம் செய்ய மனுக்கொடுத்து திரு. திருமால் சுந்தரம் வழக்கறிஞர் நியமனம் செய்யப்பட்டார் ஆனால் மேற்படி எதிரிகள் தங்கள் தரப்பில் வேறு வழக்கறிஞர் நியமனம் செய்யப்போவதாக சொல்லி அவர் வக்காலத்து தாக்கல் செய்யவேண்டாமென்று சொல்லிவிட்டதால் திருமால்சுந்தரம் வழக்கறிஞர் வக்காலத்து தாக்கல் செய்யவில்லை. மேற்படி எதிரிகள் தங்கள் வழக்கறிஞர் திரு. சந்தோஷ், MS. 3468/2019 என்பவர் தங்களுக்காக ஆஜராவதாக சொன்னார்கள். அவரும் நீதிமன்றத்தில்

ஆஜராகியிருந்தார். ஆனால் வக்காலத்து தாக்கல் செய்யவில்லை. சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவும் தயாராக இல்லை. எனவே குறுக்கு விசாரணை இல்லை.

**6, 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

6, 9 எதிரிகள் தரப்பில் திரு. நடேச ஜெயராமன், வழக்கறிஞர் வக்காலத்து தாக்கல் செய்தார் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவித்தார். எனவே குறுக்கு விசாரணை இல்லை.

சாட்சி என் முன்னால் சாட்சியம் அளிக்கப்பட்டு அதனை என்னால் தட்டச்சுருக்கு எடுத்துச சொல்லப்பட்டு, அவர் என் முன்பு என் ஆணையின் பேரில் தட்டச்சு செய்து எதிர்மனுதாரர்கள் முன் சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

14/2/25

மாவட்ட நீதிபதி
மயிலாடுதுறை

14/2/25